**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXV of BNSS)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 03.09.2024**

**Case No : CC 171 / 2022**

**Deposition of Witness : P.W. 1**

| | |
|---|---|
| **Name:** ஜெயகலா | **Caste:** |
| **Father / Husband Name:** மாயாண்டி | **Calling:** |
| **Village:** வைரவம் | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 36** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 03.09.2024**

<u>முதல் விசாரணை:</u>

நான் வைரவத்தில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பக்கத்து வீட்டில் கொத்தனார் வேலை பார்த்து வந்தார். கடந்த 3.2.2022ம் தேதி மாலை 4.30 மணியளவில் நான் என் வீட்டின் அருகிலுள்ள ஊரணியில் துணி துவைப்பதற்காக சென்றேன். அங்கு நாங்கள் 2, 3 நபர்கள் துணி துவைத்துக் கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அங்கே குளிப்பதற்காக வந்தார். அப்போது நான் ஆண்களுக்கு தனியாக குளிப்பதற்காக ஊரணியின் எதிர்புறம் இடம் உள்ளதாக சொல்லி அங்கே போகச் சொன்னேன். அதற்கு ஆஜர் எதிரி நான் இங்கேதான் குளிப்பேன் என சொல்லி என்னை புண்டமவளே என்று ஆபாசமாக பேசினார். பின்பு ஆஜர் எதிரி அவர் அணிந்திருந்த துண்டை அவிழ்த்து ஜட்டியுடன் நின்று குளித்துக் கொண்டிருந்தார். பின்பு தண்ணியை மேலே அள்ளி தெளித்து கொன்று விடுவேன் என மிரட்டி கெட்டவார்த்தையால் பேசினார். பின் நான் அங்கிருந்து சென்று விட்டேன். அருகேயிருந்த பேச்சி மற்றும் கவிதா ஆகியோரும் என்னுடன் வந்து விட்டார்கள். இதுசம்பந்தமாக நான் தட்டார்மடம் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரியை சம்பவத்திற்கு முன்பே தெரியும் என்றால் சரிதான். நான் குளித்த

ஊரணியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனியாக படித்துறை இல்லை என்றால் பெண்களுக்கு தனியாக படித்துறை உள்ளது. ஆண்கள் எதிரே உள்ள பகுதியில் குளிக்க வேண்டும். எதிரில் ஆண்களுக்கு படிகள் கட்டப்படவில்லை என்றால் சரிதான். என் ஊரிலிருந்து காவல்நிலையம் சுமார் 1 கிமீ தொலைவிருக்கும். நடந்து வந்தால் 1/4 மணிநேரத்தில் காவல்நிலையம் வந்துவிடலாம் என்றால் சரிதான். 12 மணிநேரம் கழித்துதான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். காலதாமதத்திற்கு என்ன காரணம் என்றால் என் கணவர் வந்ததற்கு பின்னிட்டு புகார் அளித்ததால் தாமதம் ஏற்பட்டது. பொதுவாக என் கணவர் பணியாற்றும் டாஸ்மாக் இரவு 10.00 மணிவரை செயல்படும் என்றால் சரிதான். உடன்குடி டாஸ்மாக்கில் இருந்து எங்கள் ஊர் வர சுமார் 45 நிமிடம் ஆகும். என் கணவரிடம் செல்போனில் தகவல் சொன்னேனா என்றால் இல்லை. வீட்டிற்கு வந்தவுடன் சொன்னேன். சம்பவம் நடைபெற்றிருந்தால் உடனடியாக புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. ஆண்கள் அந்த படித்துறையில் துணி துவைப்பது வழக்கம் என்றால் சரிதான். ஆனால் பெண்கள் இருக்கும்போது வரமாட்டார்கள். எதிரி அங்கு வந்து அவருடைய ஆணுறுப்பை அவருடைய ஜட்டியிலிருந்து எடுத்து வெளியே போட்டு தகாத முறையில் நடந்தார். புகாரினை நான் சொல்ல காவல்நிலையத்தில் எழுதினார்கள். புகார் கொடுக்க என்னுடன் என் கணவர் வந்தார். காவல்நிலையத்தில் வைத்து உருவாக்கப்பட்ட புகாரில் நான் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரி அங்கு வந்து அவருடைய ஆணுறுப்பை அவருடைய ஜட்டியிலிருந்து எடுத்து வெளியே போட்டு தகாத முறையில் நடந்தார் என புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான், காவல்நிலையத்தில் சொல்வதற்கு தயக்கமாக இருந்ததால் சொல்லவில்லை. போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரி பட்டியல் இனத்தை சேர்ந்தவர் என்றால் தெரியாது. தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி பட்டியல் சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் பொதுக்குளத்தில் குளித்தால் தீட்டு என்று கூறி எதிரியை தாக்கி காயம் ஏற்படுத்தி எதிரி புகாரளித்து விடுவார் என பயந்து அவர்மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. புகாரில் சம்பவ இடத்தில் கவிதா இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இரண்டு படித்துறைக்கும் எவ்வளவு தொலைவு என்று தெரியாது. ப.சா.3 மற்றும் ப.சா.4 ஆகியோர்களுக்கு நான் சொல்லித்தான் சம்பவம் குறித்து தெரியும். வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to

be correct.

(Sd)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.